# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஜூன் மாதம் 10 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 8.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2011 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க,**
**உணவு (திருத்தச்) சட்டம்**

[2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.- ஒ. 26/2009

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச்சட்டத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"உணவு மதியுரைக் குழு.

8. (1) உணவு மதியுரைக்குழு என அழைக்கப்படும் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் -

(i) சுகாதார சேவைகள் பணிப்பாளர்-தலைமையதிபதி. இவர் குழுவின் தலைவராதல் வேண்டும் ;

(ii) சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர். இவர் குழுவின் செயலாளராதல் வேண்டும் ;

(iii) பகிரங்க சுகாதார சேவைகளுக்குப் பொறுப்பான சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர்-தலைமையதிபதிகள் இருவர் ;

2-PL 005486 -1,115 (2011/02)

(iv) சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர்கள் இருவர் ;

(v) அரசாங்க பகுப்பாய்வாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(vi) சுங்கப் பணிப்பாளர்-தலைமையதிபதி அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்;

(vii) 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர்-தலைமையதிபதி அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(viii) 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவன சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர்-தலைமையதிபதி அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(ix) வாணிபத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்;

(x) விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர்-தலைமையதிபதி அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர் ;

(xi) கொழும்பு மாநகரசபையின் பிரதான சுகாதார மருத்துவ அலுவலர் ;

(xii) கொழும்பு மாநகரசபையின் மாநகர பகுப்பாய்வாளர் ;

(xiii) உணவு ஆணையாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப் பட்டவர் ;

(xiv) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக் கப்பட்ட சுகாதார சேவைகள் திணைக் கள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத் தின் போஷணையியலாளர் ஒருவர் ;

(xv) சுகாதாரம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட் டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சின் சட்ட அலுவலர் ; அத்துடன்

(ஆ) பின்வரும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்–

(i) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக் கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ;

(ii) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக் கப்பட்ட உணவு தொழில்நுட்பவியலா ளர் ஒருவர் ;

(iii) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக் கப்பட்ட உணவு நுண்ணுயிரியலாளர் ஒருவர் ;

(iv) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உணவு விஞ்ஞானி ஒருவர் ;

(v) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும் உணவு தொடர்பான வர்த்தக அக்கறைகளை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியவருமான உறுப்பினர் ஒருவர் ;

(vi) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும் உணவு தொடர்பான கைத்தொழில் அக்கறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியவருமான உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்

(vii) உணவு தொடர்பில் பாவனையாளரின் அக்கறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(2) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், பதவி துறத்தலினால், இறப்பினால் அல்லது அகற்றப்படுவதனால் அவர் பதவியை முன்னதாகவே வறிதாக்கினாலன்றி, அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் மீளவும் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) குழுவின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் உறுப்பினர் ஒருவராகப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கு அவருக்கு எந்தப் பதவி தகைமையளிக்கின்றதோ அந்தப் பதவியை வகிப்பதனை அவர் இல்லாதொழிப்பதன்மீது குழுவின் உறுப்பினரொருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

(4) அதன் உறுப்பினரிடையே ஏதேனும் வெற்றிடம் அல்லது அத்தகைய எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு எவ்வாறிருப்பினும் குழு அதன் பணிகளை நிறைவேற்றலாம்.

(5) குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதனை வசதிப்படுத்துவதற்கு எவரேனுமாளின் சமூகம் அவசியமாயின், பிரதம உணவு அதிகாரி, குழுவின் ஒருப்பாட்டுடன் குழுக்கூட்டமொன்றில் பங்குபற்றுமாறு அத்தகைய ஆளுக்கு அழைப்பு விடுக்கலாம் :

ஆயின், மேலும் அழைக்கப்பட்ட அத்தகைய உறுப்பினர்களின் வருகை அக்கூட்டத்திற்குத் தேவைப்படுத்தப்பட்ட கூட்டநடப்பெண்ணாக அமையமாட்டாது :

ஆயின், மேலும் அவ்வாறு அழைக்கப்பட்ட எவரேனும் ஆள் அத்தகைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட ஏதேனும் கருமத்தின்மீது வாக்களிக்கும் உரிமையைக் கொண்டிருத்தலாகாது.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, குழு அத்தகைய கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் என்பன தொடர்பில் அதன் சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.".

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*